Academic Research News

# Academic Research News

*Peer-Reviewed Journal*



**Volume 3, Issue 1 June 2025** **E-ISSN: 2584-167X**

# Music, Painting and Sculpture in *Nedunalvadai*

**U.S.E.Thamizharasan**, Assistant Professor, Tamil Department, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3284-4369**
**Received:** 17 March 2025; **Revised:** 22 April 2025; **Accepted:** 10 June 2025; **Available Online:** 30 June 2025.

## Abstract

*The "Patuppattu" and "Ettutogai" are important sources that reveal the life and cultural traditions of ancient Tamil people in Sangam literature. These literary works confirm that Sangam Tamil people had cultured skills in various arts such as music, painting, sculpture and building. Art is an expression of creativity that enriches human life. The word art means skill and creativity. "Nedunalvadai" explicits the traditional arts scuh as music, painting and sculpture in an exclusive manner. Hence, this study examines the elements of painting and sculpture expressed in "Nedunalvadai" and explains the civilization and cultural status of the people of the Sangam period.*

**Keywords:** *Nedunalvadai*, Music, Painting, Sculpture.

## References

[1] Arivanaar. *Panchamarabu.* Sakthi Ara Nilaiya Veliyidu, Kovai.
[2] Aalavandhar, A. *Tamizhar Thorkaruvingal.* Ulaga Tamizharayaschi Niruvanam, Adaiyaaru, Chennai, 1981.
[3] Irakavan, A. *Isaiyum Yaalum.* Kalainoor Pathippagam, Palayankottai, Tirunelveli.
[4] Ilampooranar (Urai). *Tholkappiyam: Porulathikaram.* Kazhaga Veliyidu, 1969.
[5] Kasi Viswanathan Chettiar. *Akananuru Kalitriyaanai Nirai.* Tirunelveli Saivasiddhanta Noorpadhikku Kazhagam, Chennai, 1947.
[6] Kailasapathi, K. *Pandai Tamizhar Vaazhvum Vazhipaadum.* Makkal Veliyidu, Chennai.
[7] Subramaniyam, Sa. Ve. *Tholkappiyam (Thelivurai).* Manivasagar Pathippagam, Chennai, 1998.
[8] Thanapandian, Thu. Aa. *Isai Tamizh Varalaru.* Tamizh Palkalaikkazham, Tanjai, 2001.
[9] Balasubramaniyam, Ku. Ve. *Sanga Ilakkiyathil Kalaiyum, Kalaik Kotpaadum.* Ulaga Tamizharayaschi Niruvanam, Chennai, 1998.
[10] Perumal, A. N. *Tamizhar Isai.* Ulaga Tamizharayaschi Niruvanam, Chennai, 1984.
[11] Mayilai Seeni Venkatasami. *Tamizhar Valartha Azhagu Kalaigal.* Santhi Noolagam, Chennai.
[12] Meenatchi Sundaranar, The. Po. Mee. *Valluvar Kanda Naadum Kaamammum.* Palaniappa Brothers, Trichy, 1957.
[13] Muthu, Ramamoorthi. *Nedunalvaadai: Moolamum Thelivuraiyum.* Gaura Pathippagam, Chennai.
[14] Vipulananda Adigal, K. *Yaal Nool.* Karandhai Tamizh Sangam, Tanjai, 1974.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News
*Peer-Reviewed Journal*

Volume 3, Issue 1 June 2025 E-ISSN: 2584-167X

# நெடுநல்வாடையில் இசை, ஓவியம், சிற்பக் கலைகள்

**உ.ச.எ.தமிழரசன்,** உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி, சிவகாசி, தமிழ் நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-3284-4369

**ஆய்வுச் சுருக்கம்**

*சங்க இலக்கியத்தில் பண்டைய தமிழர்களின் வாழ்க்கை முறையையும் பண்பாட்டு மரபுகளையும் வெளிப்படுத்தும் முக்கியமான கலைக்களஞ்சியங்களாக பத்துப்பாட்டு மற்றும் எட்டுத்தொகை விளங்குகின்றன. இசை, ஓவியம், சிற்பம், கட்டிடம் போன்ற பல்வேறு கலைகளில் சங்கத்தமிழர்கள் நுணுக்கமான திறமைகளைக் கொண்டிருந்ததை இவ்விலக்கியங்கள் உறுதிப்படுத்துகின்றன. கலை என்பது மனித வாழ்வை இன்புறச் செய்யும் படைப்பாற்றலின் வெளிப்பாடாகும். கலை என்ற சொல் திறன், படைப்பாற்றல் என்பதைக் குறிக்கும். இவ்வாய்வு, நெடுநல்வாடையில் வெளிப்படும் ஓவியக் கலை மற்றும் சிற்பக் கலையின் கூறுகளை ஆராய்ந்து சங்ககால மக்களின் நாகரிகம் மற்றும் பண்பாட்டு நிலை எவ்வாறு இருந்தது என்று விளக்குகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** *நெடுநல்வாடை*, இசை, ஓவியம், சிற்பக் கலைகள்.

**முன்னுரை**

சங்க கால மக்களின் பண்பாட்டை அறிந்து கொள்ளும் கலைக்களஞ்சியமாக பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் விளங்குகின்றன. சங்க காலத் தமிழர்கள் இசை, ஓவியம், சிற்பம், கட்டிடம் உள்ளிட்ட பல கலைகளைக் கற்றிருந்திருந்தனர். அதனை சங்க இலக்கியங்களின் வழி நாம் அறிந்து கொள்ளலாம்.அவ்வகையில் பத்துப்பாட்டில் இடம்பெறும் நக்கீரர் இயற்றிய *நெடுநல்வாடை* சங்கத் தமிழரின் கலைச்சிறப்பை எடுத்துக்காட்டும் சிறந்த நூலாக விளங்குகிறது. நெடுநல்வாடையில் இடம்பெறும் ஓவியக்கலை, சிற்பக் கலை குறித்து ஆராய்வதாக இவ்வியல் அமைகிறது.

**கலை**

மனித வாழ்க்கையை இன்புறச் செய்வது கலை ஆகும்.கலை என்னும் சொல் கல் என்னும் வேர்ச்சொல்லின் அடிப்படையில் தோன்றியதாகும்.கலை என்ற சொல் செயல்திறன், ஆண்மான், ஒளி, சாத்திரம், மேகலை எனப் பல பொருளைத் தருகின்றது.பண்டைய மக்களிடம் காணப்பட்ட நாகரிகம், பண்பாட்டை அறிய கலைகள் பெரிதும் பயன்படுகின்றன. ஐம்புலன் உணர்வின் அனுபவத்தின் வெளியீடே கலைப்படைப்பாக மாறுகின்றது.ஆங்கிலத்தில் ஆர்ட் என்பர்.திறன் என்னும் பொருளையும் உணர்த்தும்.கலை என்னும் சொல் மனத்திறன் வெளிப்பாடு என்னும் பொருளில் சிலப்பதிகாரத்தில் இடம்பெறுகிறது.

**கண்ணினும் செவியினும் திண்ணிதின் உணரும்**
**உணர்வுடை மாந்தர்க் கல்லது தெரியின்**
**நன்னயப் பொருள்கோள் எண்ணருங் குரைத்தே (தொல் .பொருள். ப.275)**

எனத் தொல்காப்பியரும் கலையின் நுட்பத்தை அறிவிறி சிறந்த உணர்வுடையர்களால் மட்டுமே உணர முடியும் என்று கலையின் சிறப்பம்சத்தைக் குறிப்பிடுகிறார். கலை வாழ்க்கையை வளப்படுத்துவது. கலையும் வாழ்வும் பிரிக்க முடியாதன.ஒன்றை ஒன்று சார்ந்தன என்று கு.வெ.பாலசுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். (கு.வெ.பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியத்தில் கலையும் கோட்பாடும், ப. 243)

**கலை பற்றிய அறிஞர்கள் கருத்து**

கலைஞர்கள் விதிமுறை அறிவினாலோ, செயல்முறைப் பயிற்சியினாலோ, படைப்புத் தொழிலைச் செய்கின்றனர். இவர்களில் சிலர் பொருள்களின் வடிவையும், வண்ணத்தையும் படைக்கின்றனர். அதாவது வடிவத்தையும், வண்ணத்தையும் வாயிலாகக் கொண்டு பொருள்களைப் படைக்கின்றனர். வேறு சிலர் குரலை வாயிலாகக் கொண்டு சில பொருள்களைப் படைத்துக் காட்டுகின்றனர். கலைஞர்கள் இவ்வாறு மொழி, லயம், இசை என்பவற்றை வாயில்களாகக் கொண்டு கலைகளைப் படைக்கின்றனர். இவை தனித்தனியாகவும், ஒன்றுக்கு மேற்பட்டவற்றோடு கலந்தும் பயன்படுத்தப் பெறுதலும் உண்டு. குழல், யாழ் என்பவற்றில் இசை, லயம் ஆகிய இரண்டும் வாயில்களாகப் பயன்படுகின்றன. கூத்தரும், பொருநரும் இசை, மொழி என்னும் இரண்டையும் விடுத்து லயம் என்ற ஒன்றை மட்டும் வாயில்களாகக் கொண்டு மாந்தரின் உணர்ச்சிகளையும், செயல்களையும் போன்மை முறையில் படைத்துக் காட்டுகின்றனர் என்கிறார் அரிஸ்டாட்டில்.

“கலையின் வாயிலாக மனிதன் வெளிப்படுத்திக் கொள்வது தன் செய்திகளையோ, நோக்கங்களையோ அல்ல. மனிதன் கலையின் வழியாகத் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்கிறான்” என்கிறார் இரவீந்திரநாத் தாகூர்.

கலை என்பது கலைஞனது அனுபவத்தினை வெளியிடும் வெளிப்பாடு மட்டுமன்று. அதன் வெளிப்பாட்டினையே கலைஞன் உணர்வு நிலையில் துய்க்கின்ற அனுபவமாகும்” என்பது தெ.பொ.மீ அவர்களின் கூற்று.

இதன் மூலம் கலை என்பது மனிதனின் மன வளர்ச்சியின் வெளிப்பாடு என்பதையும் அவ்வெளிப்பாடே இசையாகவும், நடனமாகவும், இலக்கியமாகவும், கைவினைப் பொருட்களாகவும், ஓவியமாகவும், சிற்பமாகவும் கலையாக வெளிப்படுகிறது என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

**இசைக்கலை**

ஒலியின் நுட்பமான ஒழுங்குமுறை இசையாகும்.புலன்களுக்கு இனிமையையும் உணர்வையும் ஊட்டுவது இசையாகும்.வயப்படுத்துதல், இசைவிப்பது என இசைக்குப் பொருள் தரலாம். “இசை என்றால் மக்கள் உள்ளத்தோடு பொருந்துதல் எனப்பொருள்படும். இசை இனிமையான ஒலிகளின் சேர்க்கையாகும்.இது உயிர்களின் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது. இனிமை மிக்கது. எழில் வாய்ந்தது. இது மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் தன்மையும், எழுச்சியூட்டும் வன்மையும் அமையப் பெற்றதாய் இருக்கிறது.” என்று இசை குறித்து இராகவன் குறிப்பிடுகிறார். (அ.ராகவன், இசையும் யாழும், ப-42)

தொல்காப்பியர் இசை குறித்தும் அதன் நுணுக்கங்கள் குறித்தும் எடுத்துரைக்கிறார். ஒலியினை மன ஓட்டத்திற்கு தக்கவாறு முறைப்படுத்தும் போது அது இசையாக வெளிப்படுகிறது. இதனை தொல்காப்பியர் “அகத்தெழுவளியிசை” என்று குறிப்பிடுகிறார்.அளபெடை என்பது இசையோடு தொடர்புடையதாகும். எழுத்துக்கள் நீண்டு ஒலிக்கும் போது அவை இசைத்தன்மை உடையனவாக மாறுகின்றன. எந்த அளவுக்கு இசை நீட்டம் வேண்டுமோ அவ்வளவிற்கு நீட்டும் முறை குறித்து தொல்காப்பியர்,

**நீட்டம் வேண்டின் அவ்வளபு உடைய**
**கூட்டி எழூஉதல் என்மனார் புலவர் (தொல். எழுத்து.நூன்மரபு.6)**

என்று குறிப்பிடுகிறார். பாட்டு, வண்ணம் முறையே அவற்றின் வகை, தொகை உற்று நோக்கும் போது தொல்காப்பியத்தில் இடம்பெற்றிருக்கும் இசை குறித்தான செய்திகளை உணர முடிகிறது.

**இசைக்கருவி**

சங்க காலம் தொடங்கி இன்று வரை மக்கள் தங்கள் வாழ்வில் பலவகையான இசைக்கருவிகளைப் பயன்படுத்தி வருகின்றனர். குழல், யாழ், முழவு என பல்வேறு இசைக்கருவிகளே தமிழிசைக்கு அடிப்படையாக அமைகின்றன. மேலும் நரம்புக் கருவிகள், துளைக்கருவிகள், தோற்கருவிகள், கஞ்சக் கருவிகள் என இசைக்கருவிகள் பல வகையில் உள்ளன. மரம், மூங்கில், நரம்பு, கயிறு, தோல் போன்றவை இசைக்கருவிகளை மீட்டுவதற்குப் பயன்படுகின்றன. யாழ், குழல், கோடு, தூம்பு, பறை, துடி, பதலை, முழவு, எல்லரி, கிணை, பாண்டில் என பல இசைக்கருவிகளை சங்க கால இசைக் கலைஞர்கள் பயன்படுத்தியுள்ளதை சங்க இலக்கியங்கள் வழியாக அறிந்து கொள்ளலாம்.

**வயிர்**

வயிர் என்பது ஊது கொம்பு கருவியாகும். இது போர்க்காலத்தில் பயன்படுத்தப்படும். வயிர் என்னும் இசைக்கருவியை இசைப்பவர் வயிரியர் என்று அழைக்கப்பட்டனர். அன்றில் பறவையின் ஒலியைப் போன்று வயிர் இசைக்கருவியின் ஒலி அமைந்திருந்ததை,

> **கலிமயில் அகவும் வயிர்மருள் இன்னிசை**
> **நளிமலைச் சிலம்பில் சிலம்புங் கோயில் (நெடுநல்வாடை, 99-100)**

என்று நெடுநல்வாடை குறிப்பிடுகிறது. மேலும், மயில் அகவுவது போன்றும், அச்சம் கொண்ட நாரை ஒலிப்பது போன்றும் வயிரிசை இருந்ததை,

> **தண்ணுமை செரீஇய தடந்தாள் நாரை**
> **செறிமடை வயிரின் பிளிற்றி (அகம். பா. 40.14-15)**

என்று குறிப்பிடுகிறது. வயிர் என்ற இசைக்கருவியோடு வளை என்னும் இசைக்கருவியும் இசைக்கப்பட்டதை வயிரும் வளையும் ஆர்ப்ப” (முல்லைப்பாட்டு, வரி. 92) என்று முல்லைப்பாட்டு குறிப்பிடுகிறது. இக்கருவி மரத்தினால் செய்யப்படுவது என்பதை “வயங்கு கதிர் வயிரமொடு வலம்புரி ஆர்ப்ப” (பதிற்றுப்பத்து, பா. 67. வரி. 6) என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது.

**யாழிசை**

யாழிசை இனிமை வாய்ந்தது.பரிசில் பெற, கலையை வெளிப்படுத்த பாணர் தம்மோடு யாழ் வைத்திருந்தனர். யாழின் அடிப்படையின் சிறுபாணன் என்றும், பெரும் பாணன் என்றும் பாணர்கள் வகைப்படுத்தப்பட்டனர்.

> **யாழானது பதினொறு வகைப்படும். பேரியாழ், நாரதயாழ், சகோடயாழ், செங்கோட்டுயாழ், மகரயாழ், சீறியாழ், கீசகயாழ், ஆயிரம் பேரியாழ், வில்யாழ், தும்புருயாழ், மருத்துவயாழ் எனும் தேவயாழ் என்ற யாழை வகைப்படுத்தலாம். (அறிவனார், பஞ்சமரபு, ப-10)**

இவ்யாழை கலைக்காக மட்டுமின்றி வழிபாட்டிற்கும் சங்க கால மக்கள் பயன்படுத்தி வந்துள்ளனர். மன்னர்களிடம் பரிசில் பெற காடு, மலை என நடந்து செல்லும் பாணர்கள் வழியில் எவ்வித துன்பமும் நிகழா வண்ணம் இறைவனை வேண்டி யாழ் மீட்டுவர்.

*நெடுநல்வாடை* யாழிசை பற்றி குறிப்பிடுகிறது.அரசன் போருக்குச் சென்று விட்டார்.அரசனின் நினைவு மேலிட அரசி வருத்தத்துடன் காணப்படுகிறார். அரசியின் வருத்தத்தைப் போக்க வேண்டும். இசைக்கருவிக்கு ஏற்புடையதான கரிய மரத்தால் செய்த சிறிய யாழைத் தன் இடது கைக்கொண்டு மார்புறத் தழுவி இருக்கிறாள். அவளது வாய் இனிய பாடல் ஒன்றை பாடிக் கொண்டிருக்கிறது. அவள் பாடும் குரல் ஒலியொடு யாழ் ஒலி ஒத்திசைக்கவில்லை என்பதை அறியும் அறிவு பெற்றவளாக அவள் இருக்கிறாள். எனவே அதனை சரிசெய்ய நரம்பினை ஏற்றுவதும் இறக்குவதுமாகவும், முடுக்குவதும் தளர்த்துவதுமாக யாழ் இசைக்கருவியை இயக்கிப் பார்க்கின்றாள். இதிலிருந்து அவள்

Academic Research News

*Peer-Reviewed Journal*



Volume 3, Issue 1 June 2025 E-ISSN: 2584-167X

இசை மரபும், யாழ் கருவியன் இயல்புகளையும் உணர்ந்தவள் என்பதை அறிந்து கொள்ள முடிகின்றது. யாழில் குற்றம் இல்லை. குற்றத்திற்குக் காரணம் காலம். ஆம். கூதிர்க்காலம். கூதிர்க்காலத்துக் குளிர்ச்சிக் கொடுமை. குளிர், மிகுதியான பனியால் யாழின் நரம்பு ஈரம் பட்டுக் கிடக்கிறது என்பதை உணர்ந்து கொள்கிறாள். வெப்பம் ஊட்ட எண்ணுகிறாள். நரம்பின் குளிர்ச்சி போக்க வல்ல வெப்பம் தன் மேனியில் இருப்பதை உணர்கிறாள். யாழ் நரம்பினை தன் மார்பில் மேலும் கீழுமாகத் தடவிக் கொடுக்கின்றாள். பிறகு யாழ் நரம்பினை மீட்டிப் பார்க்கின்றாள்.இயல்பான இனிய இசை எழும்புகின்றது.தன்னை மறந்து பாடுகின்றாள். இதனை,

**கருங்கோட்டுச் சீறியாழ் பண்ணுமுறை நிறுப்பக்**
**காதலர் பிரிந்தோர் புலம்பப்பெயல் கனைந்து**
**கூதிர் நின்றன்றால் போதே (நெடுநல்வாடை, 70-72)**

என்ற பாடல்வரிகள் மூலம் அறிந்து கொள்ள முடிகிறது. ஆடல் மகளிர் ஆடல் கலையில் மட்டுமின்றி யாழ் இசை மீட்டி பாடல் பாடுவதிலும் சிறப்புற்று விளங்கியதை அறிந்து கொள்ள முடிகிறது.

**ஓவியக் கலை**

அழகுணர்ச்சியின் வெளிப்பாடு ஓவியமாகும்.ஒரு பொருளையோ அல்லது காட்சியையோ மிகு ஆர்வத்துடன் காணும்போது உள்ளம் கற்பனையைத் தூண்ட அக்காட்சி வடிவமாக்கப்பட்டு காட்சிப்படுத்தப்படுகிறது. ஐம்பொறிகளில் கண்களால் கண்டு உணரப்படும் கலைப் படைப்பாகும். சங்க காலத்தில் கோயில் சுவர்களிலும், குகைகளிலும் ஓவியம் வரையப்பட்டிருப்பதால் தொன்மைக் கலையாக இருக்கின்றது. ஓவு, ஓவம், சித்திரம் என்பன ஓவியத்திற்கு வழங்கும் வேறுபெயர்களாகும். ஓவியத்திற்கு எழுத்து எனப் பெயரும் உண்டு. சித்திரங்கள் தீட்டப்பட்டுக் காட்சியளிக்கும் மண்டபத்தை எழுத்துநிலை மண்டபம் என்பர்.

**சிற்பக் கலை**

ஆயக் கலைகள் அறுபத்து நான்கில் சிற்பக்கலையும் ஒன்று. சிற்பக் கலை ஓவியக் கலையோடு மிகவும் தொடர்புடையது. அழகுணர்ச்சியும் கற்பனை வளமும் இக்கலைகளுக்கு முதன்மை. கருங்கல், செங்கல், மரம், உலோகம் ஆகியவற்றில் மண், சுதை, தந்தம், வண்ணம், கண்ட சருக்கரை (கற்கண்டு), மெழுகு இவை கொண்டு சிற்பங்கள் அமைக்கப்படும். சிற்பக் கலை அறிந்தவர்கள் நூலறிபுலவோர் எனப் பாராட்டப் பெற்றனர். சிற்பக் கலைஞர் தச்சர் என அழைக்கப்பட்டனர். கருந்தொழில் வினைஞர், கைவல் கம்மியர் எனவும் அழைக்கப்பட்டனர். நெடுநல்வாடையில் சிற்பக் கலைஞர்களின் கலையாற்றல் சிறப்பாகச் சுட்டப் பெறுகிறது.

**அரண்மனை வகுத்தலும், ஓவியம், சிற்பக் கலை நுணுக்கங்களும்**

கட்டிடக் கலையில் கரைகண்ட வல்லவர்களான கொத்தன், கொல்லன், தச்சன், தட்டான் ஆகிய அனைவரும் ஒன்று கூடினர். ஒன்று கூடி கலந்து பேசினர். கலந்து பேசி நல்ல நாளும் நாழிகையும் பார்த்தனர்.நால்வேறு திசைகளிலும் உள்ள தெய்வங்களை எல்லாம் வழிபட்டனர். அகழியும், மதிலும், வாயிலும், மாளிகையும், மன்றமும், மணிமாடமும், பேரவையும், நாற்படைக் கொட்டிலும் எங்கெங்கு எந்தெந்த அளவில் அமைய வேண்டும் என்பதை அறுதியிட்டு வரைபடம் வரைந்தனர். அறுதியிட்டு வரைந்த அந்த அளவில் சிறிதும் பிழைபடா வண்ணம், கயிறு கொண்டு நுண்ணியதாக அளந்து கண்டு கட்டி முடிக்கப்பட்டது அரசன் பெருங்கோயில். அரசன் பெருங்கோயில் அமைக்க சித்திரைத் திங்களில், ஞாயிறு நிலத்தின் உச்சிப் பொழுதில் நிற்கும் அந்தச் சிறு நாழிகையே ஏற்புடையது என்று உணர்ந்த அந்த நேரத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த நாழிகையை நுண்ணியதாக அறுதியிட்டு அறிவது அத்துணை எளியது அன்று.

சித்திரைத் திங்கள் பத்தாம் நாள் தொடங்கி, இருபது நாள் முடிய உள்ள நாட்களில் ஏதேனும் ஒருநாளில் தான் சூரியன் நிலத்தின் நடுப்பகுதியில் வந்து நிற்பான். அது எந்த நாள்?எந்த நாழிகை என்பதை சிறப்பாகக் கணிக்கும் திறனைக் கலையைச் சங்க மாந்தர்கள் அறிந்திருந்தனர்.

வளைதல் இல்லாத செவ்விய இரண்டு கோல்களை, நிலத்தில் அடுத்தடுத்து இருக்க, ஒவ்வொன்றும், நான்கு பக்கங்களில் எப்பக்கத்திலும் சாய்ந்து விடாதவாறு செங்குத்தாக நிறுத்தி வைத்து, சித்திரைத் திங்கள் பத்தாம் நாள் தொடங்கி, இருபதாம் நாள் வரையும் அக்கோலின் அருகிலேயே விழிப்போடுட அமர்ந்து இருந்து, அக்கோலின் நிழல், கோலைக் கடந்து வீழ்ந்து விடாது, அக்கோலிலேயே அடங்கி விடுகிறதா என்பதை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நாழிகையும் நுணுகி நோக்கியிருந்து, என்று, எந்நாழிகையில் அவ்வாறு அடங்கி நிற்கிறதோ, அந்த நாழிகையே, ஞாயிறு நிலத்தின் நடுப்பகுதியில் நிற்கும் நாழிகையாம் என்பது அறிந்து அந்நாழிகையில், அடிக்கல் நாட்டினர் என்பதை,

**விரிகதிர் பரப்பிய வியல்வாய் மண்டிலம்**
**இரு கோல் குறிநிலை விழுக்காது குடக்கேர்பு**
**ஒருதிறம் சாரா அரைநாள் அமையத்து**
**நூலறி புலவர் நுண்ணிதின் கயிறிட்டு (நெடுநல்வாடை, 73-76)**

என்று குறிப்பிடுகிறது.

**அரண்மனை வாயிலின் கலைநுணுக்கம்**

அரசனுக்கு அமைத்த பெருங்கோயில் வாயில் வீட்டு வாயில் போன்று இருந்தால் அழகன்று. கோட்டை வாயில். மதில் சுவருக்கு மேல் கோபுரம் உயர்ந்து நிற்க இடையே பெரிய வாயில் அமைந்திருந்தது. காண்பவர் எவரும் குன்றைத் துளைத்து உருவாக்கப்பட்டதோ என்று என்னும் வண்ணம் கலைச் சிறப்புடன் அமைக்கப்பட்டிருந்தது. பகை வென்று மீளும் யானைப்படை. யானையின் மீது வீற்றிருக்கும் வீரர்கள் உயர்த்திப் பிடித்திருக்கும் வெற்றிக்கொடி வானளாவ பறக்கும் வண்ணம், நுழைவதற்கு ஏற்ற உயரத்தில் வாயில் பெரிய வாயிலாக அமைக்கப்பட்டிருந்தது.

அத்தகைய பெரிய வாயிலுக்கு கதவு அமைப்பது பெரிய கலை.வெற்றிக்கொடி பறக்கும் கோட்டை. கோட்டையின் உள்ளே வருவதற்கு ஒரே வழி.பகைவரால் முற்றுகைக்கு உள்ளார நேரும். பகைப்படையின் மோதலால் நிலைகுலைந்து போகாத திண்மை வாய்ந்ததாக இருத்தல் வேண்டும் வாயில்கதவு என உணர்ந்தனர்.

வாயிலுக்கு இரட்டைக் கதவுதான்.அவ்வளவு பெரிய கதவினை ஒரே பலகையால் செய்ய முடியாது. பலகைகள் சிலவற்றை இணைத்தே செய்ய வேண்டும். ஆனால் செய்தவனோ தச்சுக் கலையில் வல்லவன், வித்தகன். பல பலகைகளால் ஆனது அன்று, ஒரே பலகையால் ஆனது என எண்ணுமாறு, இணைப்பு தெரியாமல் கிட்டியிட்டு இணைத்து, இருபத்து நாள்மீன்களில், உத்தரம் என்னும் நாள் மீனின்பெயர் பெற்ற உத்தர மரத்தில் செருகியிருந்தான். எவ்வளவு தான் கிடுக்கி இணைத்திருந்தாலும் மரம் மரந்தான். பகைவர்களின் யானைப்படையால் தாக்குண்டு முறிந்து போகவும் கூடும். அது நிகழா வண்ணம் தன் கலைச் சிறப்பை அதில் காட்டியிருந்தான்.இரும்பால் ஆன பட்டங்களைப் பெரிய பெரிய ஆணிகள் அடித்துப் பொருத்தியிருந்தான். ஆணி அடித்து விட்டால் போதுமா?மரமாயிற்றே. மழையில் நனைந்தால் நாளாக நாளாக சாக்காடு பட்டுவிடும் என்பதை உணர்ந்தான் தச்சன். தண்ணீர் பட்டாலும் மரத்தைப் பாழுறச் செய்யாமை கருதினான். மரத்தைச் சாதிலிங்கம் கொண்டு பூசினான். புறத்தே, மலர்ந்த குவளை மலர் போலும் வடிவம் உடைய கைப்பிடியையும், அகத்தே தாழ்ப்பளையும் பொறுத்தி வலுவான வாயிற்கதவுகளை மாட்டி விட்டனர்.

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 3, Issue 1 June 2025 E-ISSN: 2584-167X

**வாயில் கதவில் கலை நுணுக்கம்**

தச்சனின் கைவண்ணத்தில் கதவு வலுவுடையதாக ஆனது. கதவை வனப்புடையதாக ஆக்க எண்ணினான். தாமரை மலரில் திருமகள் வீற்றிருந்து தன் இருபக்கமும் தூக்கிய அவள் இரு கைகளும் குவளைமலரைத் தாங்கி நிற்க, இரண்டு பக்கமும் இரண்டு யானைகள் நின்று தம் துதிக்கையால் முகந்து வந்த நீரை, அம்மலர்கள் மீது சொரிந்து வழிபடுவது போலும் வனப்பு மிகு வடிவத்தை கலை நுணுக்கத்தைச் செதுக்கி விட்டனர். அவ்வாறு செதுக்கிக் கண்ட திருமகளின் தெய்வத் திருமேனிக்கு வெண்சிறுகடுகைச் சாந்தாக அரைத்து நெய்யில் கலந்து அப்பிப் பேணி வைத்தனர். இதனை,

**வென்று எழு கொடியொடு வேழம் சென்று புகக்**
**குன்றுகுயின் றன்ன ஓங்கு நிலை வாயில் (நெடுநல்வாடை, 87-88)**

என்று நெடுநல்வாடை குறிப்பிடுகிறது.

**அரண்மனை முற்றத்தில் கலை நுணுக்கம்**

அரசனின் அருள்பெற வருவோர் முற்றத்தில் காத்திருக்க நேரிடும். காத்திருப்பை இனிமையுடையதாக மாற்றும் வகையில் அம்முற்றம் அழகு செய்யப் பெற்றிருந்தது. புதுமணல் பரப்பப் பட்டிருந்தது. செயற்கையாக உருவாக்கிய நீர்நிலை.அதில் அன்னப் பறவைகள் தவழ்ந்து கொண்டிருந்தன. ஒருபக்கம் சிறு பூங்கா. கவரிமான்கள் சில துள்ளி விளையாடிக் கொண்டிருந்தன. கவரிமான்களின் துள்ளலைக் கண்ட அன்னப்பறவைகளும் தங்கள் சிறகுகளை விரித்துத் தாழத் தாவலாயின. வாயில் முற்றத்தில் கவரியும், அன்னப் பறவைகளும் விலங்கினங்களும் உலாவரவிடுதல் வழக்கம் என்பதை, ஏழகத் தகரும் அகினக் கவரியும், தூமயிர் அன்னமும் துணைஎனத் தெரியும்... நீள்நெடுவாயில் நெடுங்கடை" (சிலம்பு, நாடுகாண்காதை, 5-8) என்ற சிலப்பதிகார அடிகளாலும் சங்கத் தமிழரின் கலை நுணுக்கத்தை அறிந்து கொள்ளலாம்.

**மாளிகையின் மேல் மாட நிலா முற்றத்தில் கலை நுணுக்கம்**

மலைபோல் உயர்ந்த மாளிகையின் மேல்மாடி.நிலவின் அழகைக் காண வந்து கூடும் நிலா முற்றம்.முற்றத்துக் கூரையின் கூடுவாய் மகரமீன் வடிவில் அமைந்திருந்தது. அதன் வழியே மழைநீர் வந்து கொட்டுவது போல், அம்மாடத்து மேனிலைத் தொட்டியிலிருந்து நீர்வந்து வீழ்ந்து கொண்டிருந்தது.மலையருவி போல ஒலி கேட்டுக் கொண்டிருந்தது. மழையில்லாக் காலத்தும் மழைநீர் தரும் ஒலியை உண்டாக்கச் செய்யும் கலை அறிந்திருந்தனர்.இதனை,

**நிலவுப் பயன் கொள்ளும் நெடுவெண் முற்றத்துக்**
**கிம்புரிப் பகுவாய் அம்பணம் நிறையக்**
**கலிந்துவீழ் அருவிப் பாடுவிறந்து அயல (நெடுநல்வாடை, 95-97)**

என மாளிகை முற்றத்து கலை நுணுக்கத்தை *நெடுநல்வாடை* குறிப்பிடுகிறது.

**அரசமாதேவி வாழும் கருவறையில் கலைநுணுக்கம்**

அரசமாதேவி வாழும் கருவறை, கருப்பக்கிருகம், உள்ளறை, அங்கு யவன நாட்டிலிருந் வாங்கி வந்த வேலைப்பாட்டால் அழகுபெற்ற மிகப் பெரிய பாவை விளக்கு இருந்தது. அதில் நெய்நிறைய வார்க்கப்பட்டு இருந்தது. பெரிய திரி கொளுத்தப்பட்டு எரிந்து கொண்டிருந்தது. ஏவல் மகளிர் நெய்வார்த்துக் கொண்டு இருந்தனர். கருவறையின் வெளி அழகு கலையால் செம்மையுற்றிருந்தது. மலைபோன்ற உயரம். மலையைச் சுற்றி, ஏழுநிறம் காட்டும் வானவில் வட்டமிட்டு இருப்பது போல் பல நிறங்களில் வண்ணக் கொடிகள் வானளாவ பறந்து கொண்டிருந்தன. வெள்ளியை வாரி இறைத்தது போன்று எல்லா இடங்களிலும் வெண்சுண்ணம் பூசப்பட்டிருந்தது. நீல மணியைக் கடைந்து வைத்தாற் போல் கருவண்ணத்தூண்கள். செம்பை உருக்கி வார்த்துக் கட்டியது போல்

வலிமையான நெடிய சுவர். அச்சுவர் எங்கும் அழகிய வடிவினை உடைய மலர்களால் நிறைந்த வல்லிக் கொடியின் ஓவியம் தீட்டடப்பட்டிருந்தது. இத்தகைய அரசமாதேவி வாழும் கருவறையின் கலை நுணுக்கத்தை,

**செம்பு இயன்றன்ன செய்வுறு நெடும்சுவர்**
**உருவப் பல்பு ஒருகொடி வளைஇக்**
**கருவொடு பெயரிய காண்பு இன் நல் இல் (நெடுநல்வாடை, 112-114)**

என நெடுநல்வாடை குறிப்பிடுகிறது.

**பாண்டிமாதேவி உறையும் கட்டிலில் கலை நுணுக்கம்**

பாண்டிமாதேவியார் உறையும் கருவறையில் உள்ள பள்ளியறை.பள்ளியறையில் கலைநுணுக்கம் மிகுந்த வெண்ணிறக் கட்டில். அக்கட்டில் தந்தத்தால் ஆனது. முதிரா இளம் யானையைக் கொன்று கொண்டு வந்த தந்தம் அன்று. யானைகளின் வாழ்நாள் நாற்பத்தெட்டு ஆண்டுகள் என்பர். அந்த முழுநாளும் வாழ்ந்து இறந்துபோன யானையின் தந்தம். காட்டில் வறுமை நிலை கண்டு உணவின்றி அலைந்து திரிந்து இறந்து போன யானையின் தந்தம் அன்று. உடல் நலம் குன்றிய யானையின் தந்தமும் அன்று. போர்முரசோ எனக் காண்பவர் கருதும் கால்களையும், வலுவேறிய பருஉடலையும் உடைய யானையின் தந்தம்.புள்ளிகள் நிறைந்த மத்தகம் உடைமையால் அழகு பெற்ற யானையின் தந்தம். போரில் வெற்றியல்லாது தோல்வி காணா வீறு கொண்டு களம்புகுந்து வேலேறுண்டு இறந்து போன யானையின் தந்தம். அதன் உடலிலிருந்து தானே இற்று வீழ்ந்து விட்ட தந்தம்.

தந்தத்தில் தொழில் செய்ய வல்ல தச்சன். கூர்மையான சிற்றுளி கொண்டு இரண்டு பக்கமும் ஒரே பருமன் உடையதாக ஆக்கினான். பின் இலையும் பூவும் உடைய கொடி படர்ந்தால் போலும் சித்திரத்தைச் செதுக்கினான். கட்டிலின் கால் அடிப்பகுதிகள் சூல்முற்றிய மகளிரின் பால்கட்டி வீங்கிய முலைகள் போல் உருண்டு திரண்டு குடமாகக் கடையப்பட்டிருந்தன. குடத்திற்கும் கட்டிலுக்கும் இடைப்பட்ட பகுதி மெல்லியதாக மெத்தெனக் கடையப்பட்டிருந்தது. அக்கால்கள் மீது பெரிய அளவிலான பாண்டில் என அழைக்கப்படும் வட்டக் கட்டில் பொருத்தப் பட்டிருந்தது.

நுண்ணிய இழையில் கோர்க்கப்பட்ட முத்துச் சரங்கள் அக்கட்டிலில் மேல்தட்டில் ஆணி அடித்துத் தொங்கவிடப்பட்டிருந்தன. கட்டிலின் தகடு, புலியின் உடல் வரிகள் போலும் வரிகளும், சிங்கவேட்டையைச் சித்தரிக்கும் ஓவியமும் தீட்டப்பட்டிருந்தன. கச்சு என்னும் உறையுள் மயிர்களை நிறைத்துத் தைத்த விரிப்பால் மூடப்பட்டிருந்தது. தலையணைகள் இடப்பட்டிருந்தன. அம்மெத்தைக்கு மேலாக அன்னச் சேவலின் இறகு மயிர்களைப் பரப்பி வைத்தனர். அன்னத்தூவிக்கு மேலாக, மாசுபோக, அடித்துத் துவைத்துக் கஞ்சியிட்ட நூலாடையால் ஆன போர்வை விரித்திருந்தது.

கட்டிலின் மேல் ஒரு திரைச்சீலை. கட்டிலின் நான்கு கால்களிலுமும் கம்புகளைக் கட்டி அவற்றின் முனையில் வலித்துக் கட்டப்பட்டிருந்தது. அத்திரைச் சீலையில் வண்ண வண்ண மெழுகினால் மேஷம் முதலான இருபத்தேழு ராசிகளோடு சென்று அலையும் ஞாயிறு போல் அல்லாமல், உரோகிணி என்ற ஒரே ராசியோடு மட்டுமே நிலை கொள்ளும் திங்களின் ஓவியம் அழகுற தீட்டப் பெற்றிருந்தது. இதனை,

**பூந்துகில் மரீஇய ஏந்து கோட்டு அல்குல்**
**அம்மாசு ஊர்ந்த அவிர் நூல் கலிங்கமொடு**
**புனையா ஓவியம் கடுப்பப் புனைவில் (நெடுநல்வாடை, 145-147)**

என்றும், **"உரோகிணி நினைவளனள் நோக்கி நெடிது உயிரா" (நெடுநல்வாடை,163)** என்று *நெடுநல்வாடை* குறிப்பிடுகிறது. இவ்வாறாக அரசியார் வாழும் பள்ளியறை முழுக்க

Academic Research News
*Peer-Reviewed Journal*

**Volume 3, Issue 1 June 2025** **E-ISSN: 2584-167X**

முழுக்க கலை நுணுக்கம் கொண்டு அமைக்கப்பட்டிருந்ததை நெடுநல்வாடை மூலம் அறிந்து கொள்ளலாம்.

**முடிவுரை**

கலைகள் தான் ஒரு நாட்டின் நாகரிகச் செழிப்பின் அடையாளங்கள். இதனை உணர்ந்தே பழந்தமிழர் தாங்கள் வாழும் சூழல்களைக் கலைவண்ணமாக ஆக்கிக் கொண்டனர். வாழும் இடங்களையும் காணும் காட்சிகளையும் கலை நுணுக்கத்தால் கலை மயமாக்கினர். அவ்வகையில் நெடுநல்வாடை சங்கத் தமிழரின் கலை நுணுக்கத்திற்கு ஆகச்சிறந்த எடுத்துக்காட்டாய் இருப்பதை இவ்இயலின் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம்.

**குறிப்புகள்**


[1] அறிவனார். *பஞ்சமரபு.* சக்தி அற நிலைய வெளியீடு, கோவை.
[2] ஆளவந்தார், ஆ. *தமிழர் தோற்கருவிகள்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அடையாறு, சென்னை, 1981.
[3] இராகவன், அ. *இசையும் யாழும்.* கலைநூற் பதிப்பகம், பாளையங்கோட்டை, திருநெல்வேலி.
[4] இளம்பூரணர்) உரை.( *தொல்காப்பியம் : பொருளதிகாரம்.* கழக வெளியீடு, 1969.
[5] காசி விசுவநாதன் செட்டியார். *அகநானூறு களிற்றியானை நிரை.* திருநெல்வேலி சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1947.
[6] கைலாசபதி, க. *பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்.* மக்கள் வெளியீடு, சென்னை.
[7] சுப்பிரமணியம், ச .வே. *தொல்காப்பியம்) தெளிவுரை.(* மாணிவாசகர் பதிப்பகம், பாரி முனை, சென்னை, 1998.
[8] தனபாண்டியன், து .ஆ. *இசைத்தமிழ் வரலாறு.* தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சை, 2001.
[9] பாலசுப்பிரமணியன், கு .வெ. *சங்க இலக்கியத்தில் கலையும், கலைக் கோட்பாடும்.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1998.
[10] பெருமாள், ஏ .என். *தமிழர் இசை.* உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.
[11] மயிலை .சீனி .வேங்கடசாமி. *தமிழர் வளர்த்த அழகுக் கலைகள்.* சாந்தி நூலகம், பிராட்வே, சென்னை.
[12] மீனாட்சி சுந்தரனார், தெ .பொ .மீ. *வள்ளுவர் கண்ட நாடும் காமமும்.* பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி, 1957.
[13] முத்து, இராமமூர்த்தி. *நெடுநல்வாடை : மூலமும் தெளிவுரையும்.* கௌரா பதிப்பக குழுமம், சென்னை.
[14] விபுலானந்த அடிகள், க. *யாழ்நூல்.* கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை, 1974.


**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை
**கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.**
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.